
நான்காவது தேர்ச்சி : பல்வேறு பக்தி முயற்சிகளின் வழியாக செபவாழ்வை மென்மேலும் வளர்த்துக் கொள்வர்

20

## 4.3. தபக்காலத்தில் எம் பக்தி முயற்சிகள்



கடின உழைப்பின்றி மிக எளிதாக வாழ்க்கையில் முன்னேற விரும்புகின்றனர் இன்றைய இளைஞர்கள். துன்பங்களைக் கண்டு விலகிச் செல்கின்றனர். ஒன்றைப் பெறவேண்டுமானால் மற்றொன்றை இழக்க வேண்டும். கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாமல் விளைச்சலைக் கொடுக்க முடியாது (யோவா 12:24). மெழுகுதிரி எரிந்து உருகினால்தான் ஒளி கொடுக்க முடியும்.


பாவத்தின் அடிமைத்தளையிலிருந்து மனுக்குலத்தை மீட்க இயேசு மனிதனானார். தம் தந்தையின் விருப்பப்படி இத்தரணிக்கு மீட்பளிக்க தம்மையே முழுமையாக அர்ப்பணித்து, சிலுவைச்சாவை ஏற்று மரித்து உயிர்த்தெழுந்தார்.

நம் பாவங்களுக்காகவே இயேசு மரித்தார். மனமாற்றத்தின் வழியாக நம் வாழ்வை மாற்றியமைக்க வேண்டும். மனம் வருந்திப் பாவங்களுக்கு மன்னிப்புப் பெறவேண்டும்.

இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு எனும் பாஸ்காப் பெருவிழாவுக்கு ஆயத்தம்செய்ய தபக்காலம் எம்மை அழைக்கின்றது. திருநீற்றுப் புதனுடன் ஆரம்பமாகும் தபக்காலம் நாற்பது நாட்களை உள்ளடக்கியதாகும்.

தபக்காலத்தை விபூதிப் புதனன்று தொடங்குகிறோம். அன்றைய தினத்தில் மந்திரிக்கப்பட்ட விபூதியை குருவானவர் எமது நெற்றியில் சிலுவை அடையாளமாகப் பூசுகிறார். அவ்வேளையில் ''மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள்'' என்ற திருவிவிலிய அழைப்பை நினைவுபடுத்தி தபக்கால மனமாற்றத்துக்கு எம்மை அழைக்கிறார்.

- ♦ பாஸ்கர் பெருவிழாவுக்கு தகுதியுள்ள முறையில் தயார்ப்படுத்த
    - ♦ செபம்
    - ♦ தபம்
    - ♦ தான தர்மம் செய்வன் வழியாக ஒவ்வொரு கிறிஸ்தவனும் அழைக்கப்படுகின்றான்.



பின்னர் இயேசுவும் சீடர்களும் கெத்சமனி என்னும் பெயர் கொண்ட ஓர் இடத்திற்கு வந்தார்கள். அங்கே அவர் தம் சீடரிடம், ‘‘நான் இறைவனிடம் வேண்டும்வரை நீங்கள் இங்கே அமர்ந்திருங்கள் என்று கூறி...’’.

மாற். 14:32

மண்டை ஓடு எனப்படும் இடத்திற்கு வந்ததும் அங்கே அவரையும் வலப்புறம் ஒருவனும் இடப்புறம் ஒருவனுமாக அக்குற்றவாளிகளையும் அவர்கள் சிலுவைகளில் அறைந்தார்கள்.

லூக். 23:33

அவர்கள் இயேசுவின் உடலை எடுத்து யூத அடக்க முறைப்படி நறுமணப் பொருள்களுடன் துணிகளால் சுற்றிக் கட்டினார்கள். அவர் சிலுவையில் அறையப்படடிருந்த இடத்தில் ஒரு தோட்டம் இருந்தது. அங்கே புதிய கல்லறை ஒன்று இருந்தது. அதில் அதுவரை யாரும் அடக்கம் செய்யப்படவில்லை. அன்று பாஸ்கா விழாவுக்கு ஆயத்த நாளாய் இருந்ததாலும் அக்கல்லறை அருகில் இருந்ததாலும் அவர்கள் இயேசுவை அதில் அடக்கம் செய்தார்கள்.

யோவான் 19:40-42

## செயற்பாடு

I. மேற்குறிப்பிட்ட திருவிவிலியப் பகுதிகளை வாசித்து விடை எழுதுக.

1. கெத்சமனித் தோட்டத்தில் இயேசு தமது திருத்தூதர்களுக்கு என்ன கூறினார்?
2. இயேசு எங்கே சிலுவையில் அறையப்பட்டார்?
3. யூத முறைப்படி இயேசுவின் உடலை எவ்வாறு அடக்கம் செய்தார்கள்?
4. சிலுவையில் மரித்த இயேசுவுக்காக உம்மால் செய்யக்கூடியது என்ன?

II. கீழே கொடுக்கப்பட்டுள்ள பக்தி முயற்சிகளில் தபக்காலத்திற்குரியவற்றைத் தெரிந்தெடுத்து பயிற்சிப் புத்தகத்தில் எழுதுங்கள்.

செபமாலை செபித்தல், விபூதி தரித்தல், சிலுவை ஆராதனை, புனிதர் பக்தி, நத்தார் பாடல்கள் இசைத்தல், திருமணித்தியாலம், சதாசகாய அன்னை நவநாள், ஒருசந்தி இருத்தல், சிலுவைப்பாதை, ஒப்புரவு அருளடையாளம், ரோசாமிஸ்ரிகா பக்தி, மும்மணி ஆராதனை. பசான்/லத்தோனி பாடுதல், பாஸ்கா நாடகம்.

தபக்கால செபவழிபாடுகள் → சிலுவைப்பாதை
→ திருமணித்தியாலம்
→ சிலுவை ஆராதனை




கி.பி. 303ம் ஆண்டில் உரோமை நாட்டில் கொன்ரன்ரைன் என்ற பேரரசரின் தாய் ஹெலனா அரசி ஜெருசலேம் திருயாத்திரையின் போது இயேசு சுமந்து சென்ற சிலுவையைக் கண்டெடுத்து நாட்டியதாக வரலாறு கூறுகின்றது.

''சிலுவைப் பாதைப் பக்தி" கத்தோலிக்க இறை மக்களின் பூர்வீகப் பக்தி முயற்சிகளில் ஒன்று. இயேசுவின் பாடுகள், மரணம் பற்றிய ஆன்மீக உணர்வை வலுப்படுத்த இப் பக்தி முயற்சி உதவுகிறது.

திருவழிபாட்டு ஆண்டின் தபக்காலத்தில் சிலுவைப்பாதைப் பக்தி முயற்சி திருச்சபையால் மேற்கொள்ளப்படுகிறது. கத்தோலிக்க இறைமக்கள் தனியாகவும், சிறு குழுக்களாகவும், பொதுவாகவும் இதனை மேற்கொள்கிறார்கள். இன்று ஆலயங்களிலும், கல்வாரித் திருத்தலங்களிலும், பாடசாலைகளிலும் இப்பக்தி முயற்சி நடைபெறுவதைக் காண்கிறோம்.

சிலுவைப் பாதை பக்தி முயற்சியால்



- உள மாற்றத்திற்கு அழைக்கப்படுகிறோம்
- எமது பாவங்களை அவரது கல்லறையில் புதைக்கின்றோம்
- ஏதாவது ஒரு தவறை அகற்ற தீர்மானம் எடுக்கின்றோம்
- நன்மைகளைச் செய்ய முன்வருவோம்
- உன்னதர் இயேசுவை எம் வாழ்வு மூலம் பிறருக்கு வெளிப்படுத்துவோம்
- பாஸ்கா விழாவுக்கு எம்மைத் தகுதியுள்ள முறையில் தயார்படுத்துவோம்
- பிறர் துன்பங்களில் பங்கெடுப்போம்

மனுக்குலத்தை மீட்க வேண்டும் என்ற தாகத்தினால் சொல்லொணாத் துன்பங்களைப் பொறுமையோடு தாங்கி மாபெரும் வெற்றி வீரனாக உயிர்த்தெழுந்தார்.

**தபக்காலத்தில் செய்யக்கூடிய ஒறுத்தல் முயற்சிகள்:**

- ஒரு சந்தி இருத்தல்
- ஒரு வேளை உணவையாவது இல்லாதோருக்குக் கொடுத்தல்
- ஆடம்பரங்களைத் தவிர்த்தல்
- ..........................................................................................
- ..........................................................................................
- ..........................................................................................
- ..........................................................................................
- ..........................................................................................

தபமுயற்சிகளாக நாம் தபக்கால திருயாத்திரைகளை மேற்கொள்கிறோம். இயேசுவின் திருப்பாடுகளின் பிரார்த்தனைகள், பசாம், திருப்பாடுகளின் பாடல்களைப் பக்தியோடு பாடுவதாலும் தியானிப்பதாலும் எமது உள்ளத்தை ஒரு நிலைப்படுத்தி எமது பாவ வாழ்விலிருந்து விடுபட அழைக்கப்படுகின்றோம்.

மேலும் இத்தபக்காலத்தில் எமது பாவங்களுக்குப் பரிகாரமாக தான தருமங்களைச் செய்ய முன்வருவோம். அகதி முகாம்கள், அனாதை மடங்கள், வயோதிப மடங்கள் தோறும் சென்று உணவு, உடை முதலியவற்றைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் துன்புறும் நம் சகோதரர்கள் வழியாக இயேசுவை அறிவிக்கின்றோம்.

பாஸ்காப் பெருவிழா பெரிய வியாழன் தினத்தன்று ஆரம்பமாகி உயிர்ப்பு ஞாயிறு அன்று நிறைவு பெறுகின்றது. இதனால் ஒவ்வொரு ஞாயிறு திருப்பலியையும் கிறிஸ்துவின் உயிர்ப்பின் மகிமையை எடுத்துரைக்கும் பெருவிழாவாகத் திருச்சபை கொண்டாடுகின்றது.



## செயற்பாடு

1. தபக்காலத் திருயாத்திரைத் தலங்கள் மூன்றைப் பெயரிடுக.
2. தபக்கால மனமாற்றத்துக்கான ஐந்து செயற்பாடுகளைக் குறிப்பிடுக.
3. தபக்காவத்தில் பாடப்படும் பாடல்களை எழுதி, பாடிக் காட்டவும்.

### வாழ்க்கைக்கு:

துன்புறும் நம் சகோதர்களுக்கு
உதவுவதன் மூலம் உமது சிலுவையின்
பாரத்தைக் குறைக்க எனக்கு
அருள் தாரும் இயேசுவே!